# தமிழ்நாடு அரசு

கடித (நிலை) எண்.10
பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (எப்) துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

நாள் 28.11.2000
திருவள்ளுவர் ஆண்டு 2031
விக்கிரம, கார்த்திகை 13.

விடுநர்:
சை. முனீர் ஹோதா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து துறைத் தலைவர்கள்.

அய்யா,

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு அடிப்படைப் பணி - அரசு அலுவலகங்களில் பணிபுரியும் முழுநேரக் காவலர்களுக்கு ஈடுசெய் விடுப்பு அளிப்பது சம்பந்தமான தெளிவுரைகள் - வெளியிடப்படுகின்றன.

பார்வை:
(1) அரசாணை (நிலை) எண். 362, பொதுத்துறை, நாள் 21.2.1967.
(2) அரசாணை (நிலை) எண். 2218, பொதுத்துறை, நாள் 14.12.1981.
(3) அரசுக் கடித எண். 22402/93-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எப்) துறை, நாள் 4.5.1993.
(4) அரசுக் கடித எண். 48154/93-3, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எப்) துறை, நாள் 10.2.1994
(5) அரசுக் கடித எண். 90248/94-9, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எப்) துறை, நாள் 1.11.1995.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் முழுநேரக் காவலர்கள் வாரத்தில் அனைத்து நாட்களிலும் பணிபுரிய வேண்டியிருப்பதால், அவர்களுக்கு ஆண்டிற்கு 20 நாட்களுக்கு மிகாமல் ஈடுசெய் விடுப்பு வழங்கலாம் எனவும், அதற்கு மாற்று ஏற்பாடாக அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்களையும் மற்றும்

தமிழ்நாடு அடிப்படைப் பணியில் வகைப்படுத்தப்பட்டுள்ள பிற பணியாளர்களையும், காவலர்களுக்கு மாற்றுப் பணியாளர்களாக பயன்படுத்திக் கொள்ளவும், அவ்வாறு மாற்றுப்பணி புரிந்த அலுவலக உதவியாளர்களுக்கு 20 நாட்களுக்கு மிகாமல் ஈடுசெய் விடுப்பு வழங்கவும் துறைத் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அலுவலக உதவியாளர்களை, காவலர்களுக்கு மாற்றுப் பணியாளர்களாக பய்ன்படுத்துவது, சில துறைகளில் நடைமுறைச் சிக்கலை ஏற்படுத்துவதுடன், ஒருசில அலுவலக உதவியாளர்களே உள்ள அலுவலகங்களில் நடைமுறைப்படுத்துவது, அலுவலக உதவியாளர்களுக்குச் சிரமத்தை அளிக்கின்றது என்பதால், அலுவலக உதவியாளர்களை காவலர்களுக்கு மாற்றுப் பணியாளர்களாகப் பயன்படுத்தக் கூடாது என தமிழ்நாடு அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் மாநில மையச் சங்கம் முறையீடு செய்தது. இதன் அடிப்படையில், இம்மாற்று ஏற்பாடு செய்வது குறித்து வழங்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை அரசு ஆய்வு செய்து, அதனடிப்படையில் கீழ்க்கண்ட தெளிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

(அ) பார்வை இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அரசுத் துறைகளில் உள்ள காவலர்களுக்கு ஆண்டொன்றுக்கு 20 நாட்களுக்கு மிகாமல் ஈடுசெய் விடுப்பு வழங்கப்படலாம். ஈடுசெய் விடுப்பு வழங்குவதற்கு நடைமுறையில் உள்ள பிற நிபந்தனைகளும் அவர்களுக்குப் பொருந்தும்;

(ஆ) காவலர்கள் பணிக்கு வராதபோது, தமிழ்நாடு அடிப்படைப் பணியில் உள்ள பிற பணியாளர்களை, அவர்களை நிர்ப்பந்திக்காமல் அல்லது வற்புறுத்தாமல், அவர்களின் விருப்பத்துடன், அலுவலகக் காவல் பணிக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு இரவுக் காவலர் பணியில் பணிபுரிந்த அலுவலக உதவியாளர் அல்லது தமிழ்நாடு அடிப்படைப் பணியிலுள்ள பிற பணியாளர்களுக்கு, பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் உள்ள ஆணைகளின்படி, ஆண்டிற்கு 20 நாட்களுக்கு மிகாமல் ஈடுசெய் விடுப்பு வழங்கலாம்;

(இ) ஒரு காவலருக்கு மேல் உள்ள அலுவலகங்களில், தற்போது அவர்களுக்கு ஈடுசெய் விடுப்பு அளித்து கடைபிடிக்கப்படும் முறையையே தொடரலாம்.

2. தற்போது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிரச்சினை மிகச் சிறிய அலுவலகங்களில் ஒரேயொரு இரவுக் காவலர் இருக்கும் இடத்தில்தான் மிகுந்து காணப்படுகிறது. எனவே, அப்பிரச்சினையை நீக்கும் வகையில், துறைத் தலைவர்கள் ஒரு காவலர் பணிபுரியும் அலுவலகத்தில் இருக்கும் நபரைக் காலியாக உள்ள மற்ற அலுவலகங்களுக்கு மாற்றுவதற்கு ஆய்வு செய்யலாம். இத்தகைய, ஒருகாவலர் உள்ள அலுவலகங்களுக்கு காவலர் பணியிட நீட்டிப்பு தேவையா என்பது குறித்தும் ஆய்வு செய்யலாம். விலை மதிப்புடைய மற்றும் முக்கிய

ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அலுவலகக்ளில் காவலர் அவசியம் தேவைப்படும் பட்சத்தில், பாதுகாப்புக் குழுமம் (Security Agency) மூலம் ஒப்பந்த அடிப்படையில் காவலரை நியமிக்கும் ஏற்பாட்டை செய்வது குறித்துப் பரிசீலிக்கலாம். இதன்மூலம், விடுமுறை நாட்களில் காவலர்கள் பணியாற்றும் கேள்வி எழாது.

3. அனைத்துத் துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் நம்பிக்கையுள்ள

(ஒப்பம்)

அரசுச் செயலாளருக்காக